www.monlib.vic.gov.au

# இணையதளத்துக்கு ஓர் அறிமுகம்

## முன்னுரை

இணையதளம் (Internet) என்பது ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்காக உலகளாவிய அளவில் இணைக்கப்பட்டுள்ள கணிணிகளின் கட்டமைப்பே ஆகும். உலகளாவிய வலை (World Wide Web) என்பது ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, இணையதளத்தில் காணப்படும் தகவல் பத்திரங்களின் தொகுப்பு ஆகும். இது 'WWW'அல்லது 'வலை' (The Web) என்றும் அழைக்கப்படும்.




## குறிகாட்டியை (MOUSE) எவ்வாறு பயன்படுத்துவது:

உங்களது உள்ளங்கையை குறிகாட்டியின் மீது வைத்து ஆள்காட்டி விரல் குறிகாட்டியின் இடதுபக்க பட்டன் மீது இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும்.



**இடதுகைப்பழக்கம்**



**வலதுகைப்பழக்கம்**

# உங்களது கணிப்பொறியின் திரை




**குறிகாட்டி (Mouse)யில் உள்ள அம்பு கையாக மாறும்போது, நீங்கள் குறிகாட்டியை அழுத்தி வேறொரு வலைப்பக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளலாம்.**

**கணிணித்திரையில் காணப்படும் சில முக்கியமான உத்தரவு அம்புக்குறிகள் :**

**பின்னோக்கிச்செல்ல (Back):** திரையில் முன்பிருந்த வலைப்பக்கத்திற்குச்செல்ல உதவும்

**முன்னோக்கிச்செல்ல (Forward):** திரையில் அடுத்த பக்கத்திற்குச்செல்ல உதவும்

**வலையிடத்தை திரும்ப நிரப்ப (Reload):** வலையிடத்தை திரும்ப நிரப்ப உதவும்

**முதல் வலைப்பக்கம் (Home):** இணையதளத்தின் முதல்பக்கம் செல்ல உதவும்

**நிறுத்த (Stop):** இணையதளத்தேடலை நிறுத்த உதவும்

**பக்கம் மேல்,கீழ் நகர்த்த (The scroll-bar):** திரையின் வல ஓரத்தில்உள்ள இப்பாதை பக்கத்தை மேல்,கீழ் நகர்த்த உதவும்

**பிடித்தமானவை (Favorites):** உங்களுக்குப் பிடித்தமான வலையிடமுகவரிகளை சேர்த்துவைத்து தேவைப்படும்போது கீழ்சரியும் அட்டவணையில் இருந்து உத்தரவு மூலம் பெறலாம்.

# இணையதள முகவரிகள்

இணையதளத்தில் உள்ள ஒவ்வொரு வலையிடத்திற்கும் ஒரு முகவரி உண்டு. வலையில் இதற்கு **URLs** (Uniform Resource Locators) என்று பெயர்.

உதாரணத்திற்கு **www.whitepages.com.au**

**www** - உளகளாவிய இணையதள வலையில் இது ஓரு இடம் அல்லது முகவரி என்று அர்த்தம்.

**whitepages** - இது இணையதளத்தில் தகவல்களை வழங்கும் நபர் அல்லது நிறுவனத்தின்பெயர். யாருடைய கணிணியுடன் நீங்கள் இணைப்பை ஏற்படுத்துகிறீர்கள் என்பதை இது காட்டும்.

**com** - தகவல்களை வழங்கும் நிறுவனம் எவ்வகை என்பதை இது குறிக்கும்.

பொதுவாகப் பயன்படுத்தப்படும் சிலவகை நிறுவனங்கள்:

**com or co** (UK) - நிறுவனங்கள் அல்லது வர்த்தக அமைப்புகள்

**gov** - அரசாங்கம்

**mil** - இராணுவம்

**org** - ஆதாயம் தேடாத அமைப்பு

**net** - ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பு

**edu or ac** - கல்வி மற்றும் படிப்பறிவு சார்ந்த நிறுவனம்

**au** - இது நாட்டைக்குறிக்கும் அடையாளம் ஆகும். au என்பது ஆஸ்திரேலியாவைக் குறிக்கும்.

**பயிற்சிகள் :**

இவ்விடயங்களை மனதில்கொண்டு கீழ்வருவனவற்றிற்கு சாத்தியமான URL என்னவாய் இருக்கும் என்று சொல்லுங்கள்:

- RSPCA என்று அழைக்கப்படும் ஆதாயம் நாடாத ஆஸ்திரேலிய நிறுவனம் (The non-profit Australian organisation RSPCA)
- மொனாஷ் நகரசபை (The Monash Council)
- ஆஸ்திரேலிய வர்த்தக நிறுவனமான டெல்ஸ்ட்ரா (The Australian commercial organisation Telstra)

# குறிப்பிட்ட ஓரிடத்தின் இணையதள முகவரி தெரிந்திருக்கும் பட்சத்தில் அத்துடன் தொடர்பு ஏற்படுத்துவது எப்படி ?

**குறிப்பிட்ட ஒரு வலையிடத்தின் இணையதள முகவரி தெரிந்திருக்கும்போது அத்துடன் தொடர்பு கொள்வது எளிது. தொடர்பு கொள்ளும் செயல்முறை பின்வருவது.**

1. கணிணித்திரையின் மேல்பக்கத்தில் (நீண்ட செவ்வகக் கட்டத்தில) காணப்படும் முகவரி பாகத்தில் ஒருமுறை அம்புக்குறியின் மூலம் உத்திரவிடவும். இப்போது காட்டப்படும் முகவரி பளீரென தெளிவாய்த் தெரிய வேண்டும்.

2. அதன்மீது (நீங்கள் விரும்பும்) புதிய வலைமுகவரியை அச்சிடவும்.

3. Enter / return key என்ற உத்தரவு சாவியைத் தட்டி வலைத்தேடலை ஆரம்பிக்கலாம்.

**பயிற்சிகள் :**
கீழ் கண்ட வலையிடங்களில் குறிகாட்டும் அம்புக்குறியை நகர்த்தி அம்புக்குறி எவ்விடம் கையாக மாறுகின்றதென்று கவனியுங்கள். இந்தக் கையானது வேறொரு பக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தும் அடையாளம் என்பதை நினைவில் கொண்டு இந்த யோசனைகளை முயன்று பாருங்கள் அல்லது நீங்கள் ஆர்வம் கொண்டுள்ள எந்த இணைப்புடனாவது தொடர்பு கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்ய சில வலை முகவரிகள்:**

www.openroad.vic.gov.au/
உங்கள் முதல் மொழியில் ஏதாவது தகவல்கள் கிடைக்கின்றனவா என்று பாருங்கள்.

www.visitvictoria.com.au
நிகழ்வுகள் 'Events' என்ற இடத்தில் உத்தரவிட்டு என்னென்ன விளையாட்டு நிகழ்வுகள் திரையில் தெரிகின்றன என்று பாருங்கள்.

www.onlinenewspapers.com
ஆர்வமூட்டும் செய்தித்தாள் ஒன்றினைப் பாருங்கள்.

www.burkesbackyard.com.au
சமீபத்திய ஒரு காட்சி நிகழ்வின் விவரத் தொகுப்பை படித்துப் பாருங்கள்.

www.wishlist.com.au
நண்பரொருவரின் பிறந்தநாளுக்காக ஒரு நல்ல பரிசொன்றினைக் கண்டுபிடியுங்கள்.